# திருக்குறள் காட்டும் அறம் வழி தனிமனித மேலாண்மை

**ச. சிவக்குமார் & முனைவர் வா.சித்ரா**

**[1] முனைவர் பட்ட ஆய்வாளர், [2] இணைப்பேராசிரியர்**

**இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி,**

**சூலூர், கோயமுத்தூர்-641 402.**

10

**ஆய்வுச்சுருக்கம்**

உலக இலக்கியங்களில் உலகிற்கு அறம் கூறும் நூல்கள் எண்ணற்றவை. அவற்றையெல்லாம்விடப் பொதுமைத்தன்மையில் சிறந்து விளங்குவதால் திருக்குறள் முதலிடம் பெறுகின்றது. திருவள்ளுவர் அருளிய திருக்குறள் உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது. சாதி, மத, இன, மொழி வேறுபாடுகள் ஏதுமின்றி, நிலைத்து நிற்கின்ற பொதுநெறிகளைக் கூறுவதால் இதனை உலக அறிஞர் பெருமக்கள் உலகப்பொதுமறை என்று போற்றுகின்றனர்.

அன்று முதல் இன்றுவரை, இனி எக்காலத்திற்கும் மனித வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திருக்குறள் விளங்கி வருவதால், உலகில் வழங்கிவரும் பெரும்பான்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகமக்களுக்கு நல்வழிகாட்டியாகத் திகழ்கிறது. உலகப் பொதுமைக்கான திருக்குறள் அறம் வழி நெறிகளை தனிமனித மேலாண்மை ஆய்வு செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** சாதி, மத, இன, மொழி, மனத்துக்கண், இயன்றது அறம், வீழ்நாள் படா.

**முன்னுரை**

சுயநலமும் பொறாமையும் மனிதனுடைய இயல்பைச் சிதைத்து, வாழும் வாழ்விற்குப் பொருளில்லாமல் செய்துவிடுகின்றன. சாரமற்ற, பொருளற்ற வாழ்க்கை வாழ்கிறோம் என்பதை அறியாமலேயே பலரது வாழ்க்கை முடிந்துவிடுகிறது. மனித சமுதாயம் பெருமைபெற்று வாழ்வதற்கு ஒழுக்க நெறிமுறைகளைத் திருக்குறள் அனைத்துப் பரிமாணங்களிலும் எடுத்துக்காட்டி வலியுறுத்துகிறது. ஆதலால்தான் உலகப் பேரறிஞர்கள் அனைவரும் ஒரே குரலில் குறளைப் புகழ்ந்துள்ளனர்.

மனிதகுலம் பெற்ற அறிவு அனைத்தின் சாரமாகத் திருக்குறள் விளங்குகிறது எனில், அது மிகையாகாது. காலநில எல்லைகளைக் கடந்து மனித அறம் என்னும் கோட்பாட்டைச் சிந்தித்து, உலகம் உய்வதற்கான அடிப்படை அறங்களைத் தெளிவாகவும் உறுதியாகவும் வள்ளுவர் வழங்கியுள்ளார். ஆழமும் விரிவும் அழகும் நுட்பமும் கொண்ட மெய்யியல் கோட்பாடுகள் கொண்ட உலக இலக்கியம் திருக்குறள் என்பதில் ஐயம் ஏதுமில்லை. மாந்தரினம் முழுமைக்குமான பொதுமை அறங்களை இங்கு காண்போம்.

**அறத்தின் வழியில் மேலாண்மை**

திருக்குறள் எந்தச் சார்பையும் வலியுறுத்தாமல் உள்ளம் சார்ந்த நல்லியல்புகள் பற்றி மட்டுமே பேசும் நூல். உள்ளம் என்பது உலகப்பொது. அதில் சுரக்கும் அன்பும் அதன் முதிர்வான அருளுமே திருக்குறளின் பேசுபொருள். குற்றமற்ற மனநிலையைத்தான் வள்ளுவம் அறம் என்று போற்றுகின்றது.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (குறள். 34)

மாசற்ற மனம் படைத்தோர் வாழ்வு அறவாழ்வு என்பது திண்ணம். மனமது செம்மையானால் மந்திரங்கள் செபிக்க வேண்டா| என்ற திருமூலர் வாக்கும் மனதையே முன்னிலைப்படுத்துகிறது.

'தூய்மையான எண்ணங்களும் செயல்களும்
கொண்டவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி தொடர்கிறது
மனிதனை நிழல் தொடர்வது போல"[1]

என்ற வரிகள் மனத் தூய்மையின் அவசியத்தை விளக்குகின்றன.

அடுத்த குறளிலேயே மனதை மாசுபடுத்தும் காரணிகளையும் திருவள்ளுவர் பட்டியலிடுகின்றார்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (குறள். 35)

மேற்கண்ட குறளில் பொறாமை, ஆசை, கோபம், சுடுசொல் ஆகியவற்றைத் தவிர்த்து வாழ்தலே நல்லறம் என்கிறார். இதில் அழுக்காறு என்ற சொல்லாட்சி நினைந்து நினைந்து போற்றத்தக்கது. அழுக்கு ஆறாக ஓடினால், அதன் அருகில்கூட நிற்கத் தயங்குவோம். பொறாமை கூட அப்படிப்பட்ட அழுக்குகளின் சேர்க்கைதான். அதை அகத்தே வைத்திருப்பது எவ்வளவு இழிவு என்பதை,

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழிஅடைக்குங் கல் (குறள். 38)

என்ற குறள் உணர்த்துகிறது.

'உலகம் ஒழுங்காய் இருக்க நாடு ஒழுங்காய்
இருக்க வேண்டும் நாடு ஒழுங்காய் இருக்க
குடும்பம் ஒழுங்காய் இருக்கவேண்டும்.
குடும்பம் ஒழுங்காய் இருக்க தனிமனிதன்
ஒழுங்காய் இருக்கவேண்டும். தனிமனிதன்
ஒழுங்காய் இருக்க அவனுடைய இதயம்
ஒழுங்காய் இருக்க வேண்டும்"[2]

என்ற சீனத் தத்துவஞானி கன்ஃபூஷஹியஸஹின் வரிகள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

மனிதனின் மனதைச் செம்மைப்படுத்தி, அவனைத் தெய்வீகமாக மாற்றும் பணியை வள்ளுவம் அறம் வழி தனிமனித மேலாண்மையில் செவ்வனே செய்கிறது.

**ஆன்மிக நோக்கு**

கடவுளுக்குச் சமயமில்லை: சமய பேதங்களோடு வாழும் மனிதனின் பார்வையில், வழிபாடுகளில், கொண்டாட்டக் களங்களில் கடவுளைக் காணமுடியாது. படைத்த ஒருவன் தன் படைப்புகளிடம் வேற்றுமை பாராட்டுவது இயற்கை நியதிக்கு முரணானது. சுமய வேற்றுமைகளால் கீறிக்கொண்டு காயம்பட்ட சமூகத்தில் கடவுள் இருப்பதும் இல்லை.

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல (குறள். 4)

வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவனின் திருவடிகளை அதே தன்மையோடு பற்றி வாழ்பவனே துன்பமிலாப் பெருவாழ்வு வாழமுடியும்: நிலையான பேரின்பத்தை எய்திட முடியும். இதுவே வள்ளுவம் காட்டும் ஆன்மிக நெறியாகும்.

'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமே"[3]

என்ற வள்ளலாரின் பாடல் வள்ளுவரின் நெறிக்கு வலுச்சேர்கிறது.

**அன்புநெறி**

அன்பு என்பது உயிரின் பண்பாகும். இந்த உலகை இயக்கும் ஒற்றை மந்திரச்சொல் ~அன்பு|, வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள் என அனைத்தும் அன்பு ஒன்றையே வலியுறுத்துகின்றன. அனைத்து மதங்களும் ஞானிகளும் யோகிகளும் அன்பையே முதன்மைப் படுத்துகிறார்கள். அகத்தில் அன்பு நிறைந்திருந்தால் புறவாழ்க்கை புனிதமாகிவிடும். எப்படிப்பட்ட பிரச்சனைக்கும் எளிதில் தீர்வு கிடைக்கும்.

'நேசம், உங்கள் அகத்தின் பருவநிலையையே
மாற்றிவிடும். இதன்மூலம், வாழ்வின் முழு இருப்பே
அடியோடு மாறிவிடும். வெளியில் எந்த மாற்றமும்
தெரியாது. ஆனால், நேசத்தில் முழுமையாய்
மூழ்கியிருக்க, முற்றிலும் பூரணமான வாழ்விருப்பு
உங்களுக்குக் கிடைத்துவிடும்"[4]

அன்பற்ற வாழ்க்கை பயனற்ற வாழ்க்கை என்று அறுதியிட்டுச் சொல்கிறது வள்ளுவம்.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. (குறள். 78)

ஒருவர் இவ்வுலகில் இன்பமும் அமைதியும் பெற்று வாழவேண்டும் என்றால், அதற்கு இடுகின்ற முதலீடு அன்பாகத்தான் இருக்கவேண்டும். அன்பை அடிப்படையாகக் கொண்ட இன்பமே நிரந்தரமானது. பிறவற்றால் வரும் இன்பம் நீர்க்குமிழி போன்று நிலையற்றது. ஆகவேதான் பாரதியார்.

'செய்கதவம்! செய்கதவம்! நெஞ்சே! தவம்
செய்தால் எய்த விரும்பியதை யெய்தலாம் -
வையகத்தில் அன்பிற் சிறந்த தவமில்லை
அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு"[5]

என்று அன்பின் சிறப்பை எடுத்துரைக்கிறார்.

**ஆட்சிமுறை**

ஒருநாடு செழிப்புற்று விளங்கவேண்டுமெனில் அந்நாட்டில் நல்லாட்சி நடைபெறவேண்டும். மக்களின் வாழ்க்கைத்தரம் மன்னனின் ஆட்சித்தரத்தைப் பொறுத்தே அமைகிறது.

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் (குறள். 386)

காட்சிக்கு எளியனாய், ஏழையரின் தோழனாய், கடுஞ்சொல் கூறா கனிந்த உள்ளத்தவனாய், மானிடநேயத்தை மனதில் தேக்கி வாழ்பவனே ஆளத்தகுந்தவன் என்று அரசியல் தலைமைக்கு இலக்கணம் வகுக்கிறது வள்ளுவம்.

'நெல்லு முயிரன்றே: நீரு முயிரன்றே:
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்:
அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேண்மிகு தானை வேந்தற்குக் கடனே"[6]

நெல்லும் நீரும் உயிரல்ல: மன்னரே இவ்வுலகில் உயிரானவர் ஆவார் என்று புறநானூறு கூறுவது சாலப்பொருந்தும்.

கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி (குறள். 390)

இல்லையென்று வருவோர்க்குத் தருவதும், அன்பு செலுத்துவதும், ஆட்சிமுறை வழுவாதிருப்பதும், குடிமக்களைப் பாதுகாத்தலும் ஆகிய நான்கு குணமும் உடையவனே அரசரில் சிறந்த அரசன் என்கிறார் வள்ளுவர்.

மேற்குறித்த குறட்பாவை நன்கு கற்று, அதன்வழி ஒழுகும் ஆட்சியாளர்களால் மட்டுமே நல்லாட்சியை நல்கமுடியும்.

மக்கள் தங்களை ஆளத் தகுதியுடையவர்கள் யார் என்பது ஆராய்ந்து, ஆட்சியை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல் (குறள்.517)

என்று மக்களுக்கான அறிவுரையும் குறளில் கூறுப்பட்டுள்ளது.

மக்கள் நலனில் அன்பும் அக்கறையும் கொண்ட ஆட்சியாளர்களும், ஆட்சியாளர்களிடம் நம்பிக்கை கொண்ட மக்களும் சேர்ந்துதான் நல்லரசை ஏற்படுத்த முடியும் வள்ளுவம் அதற்கான வழியைக் காட்டுகிறது.

**வாழ்வியல் நெறிகள்**

சகமனிதர்களோடு பின்னிப் பிணைந்திருக்கும் மானுட வாழ்வின் முழுமையை நோக்கி ஒட்டுமொத்த உலகை வழிநடத்தக்கூடிய பேராற்றல் வள்ளுவத்திற்கு உண்டு. அன்றாட வாழ்க்கையை அற்புதமாக வாழும் கலையை உலக மக்களுக்கு எடுத்துரைப்பதில் திருக்குறளைவிடச் சிறந்தநூல் ஏதுமில்லை.

மனைமாட்சி மங்கலம் பொங்க வளர, விருந்தினர்களை இன்முகம் காட்டி உபசரிக்கவேண்டும்.

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தல் பொருட்டு. (குறள். 81)

பிறர் செய்த உதவியை எந்நாளும் மறத்தல் கூடாது. ஆனால், அவர் செய்த தீமையை, கெடுதலை அப்போதே மறந்து விடுவது நல்லது| என்ற அரியகருத்தை வள்ளுவர் எளிமையாக விளக்குகிறார்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று (குறள். 108)

என்ற குறள் ஒருவரின் வாழ்நாள் முழுமைக்கும் பயன்தருவதாக அமைகிறது.

தனிமனிதவாழ்வு சமூகநலனை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை ஒப்புரவு அறிதல் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

இனிமையும் இரக்கமும் உடைய பேச்சு இறைமையின் வெளிப்பாடு (குறள்.91), துன்பம் செய்தவர்களைப் பொறுத்துக்கொள்வதும் தவமே (குறள்.261), பிறர் தேடிய பொருளை நாம் அடைய நினைத்தால் நம் வாழ்வே கெட்டுவிடும் (குறள். 171), திருடியும் ஏய்த்தும் சேர்த்த செல்வம் வந்த வேகத்திலேயே அழியும் (குறள். 283), நல்லார் உறவைக் கைவிடுவது பலரைப் பகைத்துக் கொள்வதற்கு நிகரானது (குறள். 450), மறந்தும் கூட பிறருக்கு துன்பம்தர எண்ணவேண்டாம் (குறள். 204), அழிவற்ற நிலையான செல்வமான கல்வியை நல்ல முறையில் கற்கவேண்டும்

(குறள். 400), மேலான புகழைத் தரும் ஒழுக்கத்தை உயிரைவிட மேலானதாகக் கருதவேண்டும் (குறள் 131) என்பன போன்ற எண்ணற்ற பொதுவான வாழ்வியல் நெறிகளை உலக மக்கள் அனைவருக்குமானதாக விளக்குகிறது வள்ளுவம். எனவேதான் ஆல்பர்ட் சுவைட்சர் என்ற ஜெருமானியப் பேரறிஞர் வள்ளுவத்தின் சிறப்பை இவ்வாறு நிலை நாட்டுகிறார்.

'ஒழுக்கமே மனிதனடைய உயர்ந்த
குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பதை
மிகுந்த உறுதிப்பாட்டுடன் வள்ளுவர் அறிவிக்கிறார்.
ஒவ்வொருவரும் தனக்குத்தானே செய்து கொள்ள
வேண்டிய கடமைகளையும் மற்றவர்களுக்குச்
செய்ய வேண்டிய கடமைகளையும் சிறந்த
பண்பாட்டோடும் மதிநுட்பத்தோடும் வள்ளுவர்
பேசுகிறார். உலக இலக்கியத்தில் இத்தகைய
மாண்புமிக்க மெய்யறிவு, வேறு எந்நூலிலும்
இததுணை சிறப்பாகப் பொலிவுறவில்லை"[7]

**முடிவுரை**

திருக்குறளில் பேசப்படும் நெறிகள் ஒரு சமூகத்தை நோக்கிச் சொல்லப்பட்டது என்பதைவிட, எந்தச் சமூகத்திலும் வாழும் ஒரு தனிமனிதனுக்கானது என்றே கூறலாம். திருக்குறள் மனித இனத்தின் இலக்கியப் பெட்டகமாகவும் கருத்துக் கருவூலமாகவும் திகழ்கிறது. உயர்ந்த ஞானத்தைப் புகட்டும் ஓர் உன்னதப் படைப்பாக விளங்குகிறது. உலகமக்கள் அனைவருக்குமாகச் சிந்தித்து எளிதாகப் பின்பற்றக்கூடிய அறங்களைக் கூறுகிறது. அந்த அறங்கள் பெருந்தன்மை உடையனவாகவும் அறிவுக்குப் பொருத்தமுள்ளனவாகவும் இருப்பதால் உலக அறிஞர்கள் திருக்குறளைப் போற்றுகின்றனர். ~உலகம் போற்றும் திருக்குறளுக்குத் தாயாகத் தமிழ் விளங்குகிறது| என்பது தமிழுக்குக் கிடைத்த ஆகச்சிறந்த பெருமை ஆகும்.

**அடிக்குறிப்புகள்**


1. மனம் பிரார்த்தனை மந்திரம் டாக்டர். எம்.எஸஹ் உதயமூர்த்தி, பக். 86.
2. அன்பிற் சிறந்த தவமில்லை, தமிழருவிமணியன், கற்பகம் புத்தகாலயம், பக். 48.
3. அருள் விளக்கமாலை, வள்ளலார்
4. அன்பின் அதிர்வுகள், ஓஹேஷஹா, கண்ணதாசன் பதிப்பகம், பக். 20, 21.
5. பாரதியார் கவிதைகள், விநாயகர் நான்மணிமாலை. பக்.100
6. புறம் : 186 (1-4)
7. Albert Schweitzer, India Thought and Its Development, Wilco Bombay, 1960, Page . 199.